Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 7, 2024

வெள்ளிக்கிழமை ஜூன் 07, 2024 | ஒளி: 09 கதிர்: 268 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## இலங்கையில் “Starlink”க்கு அனுமதி

இலங்கையில் செயற்கைக்கோள் அடிப்படையிலான இணைய சேவைகளை வழங்குவதற்கு “Starlink” நிறுவனத்திற்கு இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு (TRCSL) அனுமதி வழங்கியுள்ளதாக தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் அறிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜூலை முதல் மின்கட்டணம் குறைப்பு




மின்கட்டணம் ஜூலை மாதம் முதலாம் திகதியில் இருந்து குறைக்கப்படும் என மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## “புலிகளைப் போலவே யானைகள் வருகின்றன”

காட்டு யானைகள் விடுதலைப் புலிகள் போன்று நடந்து கொள்வதனால் இரவில் நிம்மதியாக உறங்க முடியவில்லை,வெளியில் சுதந்திரமாக நடமாட முடியவில்லை என முன்னாள் வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான விமலவீர திஸாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## கோடரி தாக்குதலில் இளைஞன் படுகாயம்

■ நிதர்சன் வினோத்

அச்சுவேலி உளவிக்குளம் ஆலயத்திற்கு முன்பாக வியாழக்கிழமை (06) காலை கோடரி வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொடர்ச்சி P2



# ரோயல் பார்க் கொலை வழக்கு: பொது மன்னிப்பு முரணானது

ரோயல் பார்க்கில் இவோன் ஜொன்சன் எனும் யுவதியை கொலை செய்தமைக்காக மரணதண்டனை விதிக்கப்பட்ட ஜூட் சமந்த ஜயமஹவிற்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய பொதுமன்னிப்பு அரசியலமைப்பிற்கு முரணானது என உயர் நீதிமன்றம் இன்று(06) தீர்ப்பளித்துள்ளது.

குறித்த வழக்கின் தீர்ப்பு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவொன்றை பரிசீலித்த உயர் நீதிமன்றம் இதனை அறிவித்துள்ளது.

2005ஆம் ஆண்டு ரோயல் பார்க் சொகுசு தொடர்மாடி குடியிருப்பில் இவோன் ஜொன்சன் எனும் 19 வயது யுவதியை கொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாக காணப்பட்ட ஜூட் சமந்த ஜயமஹவிற்கு 2012ஆம் ஆண்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. எனினும், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் அவர் விடுதலை செய்யப்பட்டார். தொடர்ச்சி P2



## அரசியல் அலுவலகம் திறப்பு...

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கொழும்பில் தனது அரசியல் அலுவலகத்தை வியாழக்கிழமை (06) சுப நேரத்தில் திறந்து வைத்தார்.

புதிய அலுவலகம், கொழும்பு சேர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.



## சதொசவில் விலை குறைப்பு

லங்கா சதொசவில் சில அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, உருளைக்கிழங்கு 75 ரூபாவால் குறைக்கப்பட்டு 350 ரூபாவுக்கும், கோதுமை மா 5 ரூபாவால் குறைப்பட்டு 190 ரூபாவுக்கும் வெள்ளை கௌபீ 110 ரூபாவால் குறைப்பட்டு 990 ரூபாவுக்கும் சிவப்பு கௌபீ 45 ரூபாவால் குறைக்கப்பட்டு 950 ரூபாவுக்கும் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## மஹிந்த எதிர்க்கிறார்; மொட்டு ஆதரிக்கிறது

### கபீர் கிண்டல்: ஆடையை தூக்க வேண்டி வரும் என்கிறார்



தனியார் மயப்படுத்தலுக்கு எதிர்ப்பு என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கையில், இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்திற்கு பொதுஜன பெரமுனவினர் ஆதரவளிப்பது வேடிக்கையானது என்று ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கு மாகாணங்களில்


## “காணி பிரச்சினை தீர்க்கப்படாத பிரச்சினை”

பாரம்பரிய விவசாய நிலங்கள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி பல்வேறு மாவட்டங்களுக்கான தனது விஜயத்தின் போது உறுதியளித்துள்ள போதிலும் அது பேச்சளவில் மட்டுமே இருந்து வருகிறது.வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்கான காணி பயன்பாட்டுப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளது என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஒருகோடி ரூபாய் பெறுமதியான

## 1,456 கிலோ கிராம் இஞ்சி சிக்கியது



■ ரஸீன் ரஸ்மின்

இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக இலங்கைக்கு சட்டவிரோதமாக கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் ஒரு தொகை இஞ்சி, நுரைச்சோலை - இலந்தையடி கடற்பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2


## கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தை தீர்க்கவும்



கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரம் தொடர்பில் விசாரணை குழுவொன்றை அமைத்து தீர்வுகளை முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) நடைபெற்ற இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ரூ.1,700 சம்பளம் இம்மாதம் கிடைக்காது



■ ஆ.ரமேஸ்

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்காக 1,700 ரூபாய் சம்பள உயர்வு இம்மாதம் (10)ஆம் திகதி தொழிலாளர்கள் கிடைப்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டுமென தொழில் அமைச்சின் செயலாளர் மே 21 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# இலங்கையில் “Starlink”க்கு அனுமதி

உரிய வகையில் பொதுமக்கள் கருத்தறியப்பட்டதன் பின்னரே இந்த அனுமதி வழங்கபட்டிருப்பதாகவும், இது தொடர்பான மேலதிக தகவல்கள் வெள்ளிக்கிழமை (07) வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்

# ஜூலை முதல் மின்கட்டணம் குறைப்பு

0-30 வரையான அலகுகளை கொண்ட மின்பாவனைகளில் ஓர் அலகுக்கு அறவிடப்படும் 8 ரூபாவை 6 ரூபாவாக குறைப்பதற்கும், 30 -60 மின்பாவனையில் ஓர் அலகுக்காக அறவிடப்படும் 20 ரூபாவை 9 ரூபாவாக குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்தின் மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் பேசுகையில், நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மின்கட்டணம் திருத்தம் தொடர்பான கொள்கை காணப்படுகிறது.
இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கமைய மின்கட்டணம் திருத்தம் தொடர்பான யோசனையை கடந்த வாரம் நிறைவு செய்தோம்.
அதனடிப்படையில், 60-90 வரையான அலகுகளில் ஓர் அலகுக்குஅறவிடப்படும் 30 ரூபாவை 18 ரூபாவாக குறைப்பதற்கும், 120 மின்பாவனையில் ஓர் அலகுக்கு அறவிடப்படும் 50 ரூபாவை 30 ரூபாவாக குறைப்பதற்கும் திருத்தங்கள் முன்வைக்கப்படும் என்றார்.

# “புலிகளைப் போலவே யானைகள் வருகின்றன”

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாநேரத்தில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு வனஜீவராசிகள் அமைச்சர் பவித்ரா வன்னியராட்சி பதிலளித்துக் கொண்டிருக்கும் போது குறுக்கிட்டே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் அனைத்து பகுதிகளிலும் காட்டு யானைகளினால் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.காட்டு யானைகளினால் வருடாந்தம் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் சேதமாக்கப்படுகின்றன. மனித உயிர்கள் பல இழக்கப்படுகின்றன யானை பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுக்கும் போது டொலர்களில் நிவாரணம் பெறும் தரப்பினர் நீதிமன்றத்தை நாடி முன்னெடுக்கவிருக்கும் செயற்பாடுகளுக்கு தடையுத்தரவை பெற்றுக் கொள்கிறார்கள்.

யானைகளுக்கு குழிகள் வெட்டும் திட்டத்தை நான் ஆரம்பித்தேன். யானைகளுக்கு ஆதரவாக தடையுத்தரவு பெறும் தரப்பினரது வீடுகளை யானைகள் தாக்குவதில்லை.வழக்கு தாக்கல் செய்பவர்களின் வீடுகளையும் யானைகள் தாக்குவதில்லை.அப்பாவி மக்களின் வீடுகளை தான் யானைகள் தாக்குகின்றன. இறுதியில் யானைகளும் உயிரிழக்கின்றன. மனிதர்களும் உயிரிழக்கிறார்கள். இது தேசிய பிரச்சினை

காட்டு யானைகள் விடுதலைப்புலிகள் போன்று நடந்து கொள்கின்றன இதனால் பிரதேசவாசிகள் தமது கிராமங்களை விட்டு வெளியேறுகிறார்கள்.இரவில் நிம்மதியாக உறங்க முடியவில்லை, வீதியில் செல்ல முடியவில்லை. மாணவர்கள் பாடசாலைக்கு கூட செல்ல முடியவில்லை. யானைகள் பொதுமக்களை அடித்துக் கொல்கின்றன

விவசாயத்துறையை மேம்படுத்த வேண்டுமானால் யானை பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். சுற்றாடல் துறைசார் நிபுணர்கள் என்று குறிப்பிட்டுக் கொள்பவர்களிடம் இதற்கு சிறந்த திட்டமில்லை என்றார்.

# பொது மன்னிப்பு முரணானது



மேல் நீதிமன்ற நீதியரசர்கள் எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய குழுவின் கீழ் இந்த மனு விசாரணைக்கு வந்தது.

ஜூட் ஷமந்த ஜயமஹாவுக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியதன் மூலம் மனுதாரரின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட பிரதிவாதிக்கு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கிய போது, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மனுதாரரின் அடிப்படை உரிமைகளையும் பொது நம்பிக்கைக் கோட்பாட்டையும் மீறியுள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

ரோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவின் தீர்மானத்தின் சட்டபூர்வமான தன்மையை எதிர்த்து பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டு அமைப்பு இந்த அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்திருந்தது.

இந்த தீர்ப்பை கருத்திற் கொண்டு, ஜூட் ஜயமஹாவுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை அமுல்படுத்துவது தொடர்பில் சட்ட ரீதியாக தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உயர் நீதிமன்றம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன, சட்டத்தரணி ருக்ஷான் சேனாதீர மற்றும் ரன்மலி மீபாகல ஆகியோர் ஆஜராகினர். பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா ஆஜரானார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் பைசர் முஸ்தபா ஆஜரானார். இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சார்பில் சாலிய பீரிஸ் ஆஜராகியிருந்தார். சட்டமா அதிபரி சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நெரின் புள்ளே ஆஜரானார்.

# 1,456 கிலோ கிராம் இஞ்சி சிக்கியது

அத்துடன், இந்த இஞ்சி கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கற்பிட்டி - உச்சிமுனை பகுதியைச் சேர்ந்த 30 மற்றும் 40 வயதுடையவர்கள் எனவும் நுரைச்சோலை பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், மூன்று மீன்பிடி இயந்திர படகுகள், மூன்று என்ஜின்கள் மற்றும் இருப்பிடத்தின் திசையைக் கண்டறியும் ஜி.பி.எஸ் கருவியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதன்போது 29 மூடைகளில் அடைக்கப்பட்ட 1,456 கிலோ கிராம் இஞ்சி கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவை ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி கொண்டது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை சந்தையில் இஞ்சியின் விலை உச்சத்தை தொட்டிருப்பதால், இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக இவை இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தை தீர்க்கவும்

இந்திய தேர்தலில் மக்கள் ஆணையை பெற்று வெற்றிபெற்று மூன்றாவது முறையாக பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு எமது வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றோம். அத்துடன் தமிழ்நாட்டில் 40 ஆசனங்களை வெற்றிபெற்றுள்ள திராவிட முன்னேற்ற கழக ( திமுக) தலைவர் முதல்வர் ஸ்டாலினுக்கும் எமது வாழ்த்துக்களை கூறிக்கொள்கின்றேன்.
இதேவேளை கல்முனை பிரதேச செயலகம் விடயத்தில் 1993ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானம் ஊடாக 30 வருடங்களாக பிரதேச செயலகமாக செயலாற்றியுள்ளது. அந்த அமைச்சரவை தீர்மானத்தை ஹன்சாட்டில் பதிய வேண்டும் என்று கேட்கின்றேன். இந்த விடயத்தில் ஏன் கணக்காளர் ஒருவரை நியமித்து அந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது இருக்கின்றது என்று கேட்கின்றேன்.

இது தொடர்பான பிரச்சினைகளுக்கு பிரதமர் விசாரணை குழுவொன்றை நியமித்து நியாயமான முறையில் விசாரணைகளை முன்னெடுத்து, சரி பிழைகளை கண்டறிந்து தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்கின்றேன். இந்த பிரதேச மக்களின் குறைகளை தீர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு கடமையுள்ளது.
அத்துடன் மன்னார் மாவட்டத்தில் காற்றாலை பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது. மக்கள் தாம் அபாய சூழலில் இருப்பதாகவே உணர்கின்றனர். காற்றலை சரியான திட்டமிடலுடன் செய்யாமையினால் மன்னார் நகரமே நீரால் மூழ்கும் நிலைமை உள்ளது. தனியாக கம்பனிகளுடன் பேசாது அங்குள்ள மக்களுடனும் மக்கள் பிரதிநிதிகளுடனும் பேசினாலே தீர்வுகளுடன் அதனை செய்ய முடியுமாக இருக்கும் என

# கோடரி தாக்குதலில் இளைஞன் படுகாயம்

உளவிக்குளம் ஆலயத்தின் உப- தலைவராக செயற்பட்டுவரும் 38 வயதுடைய அச்சுவேலி உளவிக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் மீதே கோடரி வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முகத்தை மறைத்தவாறு இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் கோடரி ஒன்றினால் குறித்த இளைஞரை தாக்கியுள்ளனர். தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் கையில் பலத்த காயத்துக்கு உள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலைக்கு செல்வதற்காக சென்று கொண்டு இருந்தபோது ஆலயத்துக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் வைத்து வழி மறித்த கும்பல் இளைஞரை சரமாரியாக தாக்கியதில் குறித்த இளைஞன் கைகளில் பலத்த காயம் அடைந்தார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ரூ1,700 சம்பளம் இம்மாதம் கிடைக்காது

அந்தத் தொகையை, தம்மால் தொழிலாளர்களுக்கு வழங்க முடியாதென பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் எதிர்ப்பு காட்டி வந்திருந்தது. சம்பள அதிகரிப்பு வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்தி 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கை கடந்த (03) ஆம் திகதி விசாரணைக்கு எடுத்து கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்றம், வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்க முடியாதென தீர்ப்பளித்தது.

இது இவ்வாறிருக்க, இம்மாதம் (10) தாம் திகதி வழங்கப்படவுள்ள மாத சம்பளம் 1,700 ரூபாய் படியே தயாரிக்கப்படுமென தொழிலாளர்கள் நினைத்துக்கொண்டுள்ளனர்.

இருந்த போதிலும் இம்மாத சம்பளத்தின் இறுதி கணக்கு, 05ஆம் திகதி புதன்கிழமை தோட்ட நிர்வாகங்களால் முடிக்கப்பட்டுள்ளது. ஆகையால், பழைய சம்பளமே கிடைக்குமென தோட்டத் தொழிற்சங்க தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பள அதிகரிப்பு தொடர்பிலான சுற்றுநிருபங்கள் எவையும், தங்களுக்கு கிடைக்கவில்லையென தொழிற்சங்க தலைவர்களிடம், தோட்ட நிர்வாகங்கள் தெரிவித்துள்ளன.

# சதொசவில் விலை குறைப்பு

இதேவேளை, காய்ந்த மிளகாய் 20 ரூபாவால் குறைக்கப்பட்டு 780 ரூபாவுக்கும், நெத்தலி 20 ரூபாவால் குறைக்கப்பட்டு 930 ரூபாவுக்கும், கடலைப் பருப்பு 15 ரூபாவால் குறைக்கப்பட்டு 185 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்த அத்தியாவசியப் பொருட்களின் குறைக்கப்பட்ட விலையை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியுமென அந்த நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

# மஹிந்த எதிர்க்கிறார்: மொட்டு ஆதரிக்கிறது

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) நடைபெற்ற இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அதன்போது கபீர் ஹாசீம் மேலும் கூறுகையில்,
இந்த சட்டமூலம் தொடர்பில் மின்சார சபை துறையினர் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனர். இது தொடர்பில் ஆராய தங்களுக்கு போதுமான காலம் வழங்கப்படவில்லை என்று மின்சார சபை தொழிற்சங்கங்களும், பொறியியலாளர்களும் கூறுகின்றனர். தங்களுடன் முறையாக கலந்துரையாடவில்லை என்றும் கூறுகின்றனர்.

இதனை பாராளுமன்ற மேற்பார்வை குழுவுக்கும் இரண்டு நாட்களுக்கு முன்னரே கொண்டுவரப்பட்டுள்ளது. அத்துடன் நீதிமன்றமும் இது தொடர்பில் அறிவித்துள்ளது. இவ்வாறான நிலையையில் அவசரமாக இந்த சட்டமூலத்தை கொண்டு வருவது முறையற்றதே. இதேவேளை 2020 ஒகஸ்ட் மாதத்தில் 66 சதவீதத்தால் மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டது. பின்னர் 2023 ஒக்டோபர் மாதத்தில் 88 சதவீதத்தால் அதிகரித்தனர். அதனை தொடர்ந்து 18 சதவீதத்தால் கட்டணம் அதிகரிக்கப்பட்டது. அதனால் குறைந்த வருமானம் பெறும் 5 இலட்சம் பேரின் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதுதான் நடந்தது.

இப்போது மின் கட்டணத்தை குறைக்கப் போவதாக அமைச்சர் கூறுகின்றார். ஆனால் 5 இலட்சம் மக்களின் மின்சாரத்தை துண்டித்துவிட்டு இப்போது கட்டணத்தை குறைப்பது தொடர்பில் கூறுகின்றனர். 2002ஆம் ஆண்டு காலத்தில் இதுபோன்ற சட்டமூலத்தை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் முன்வைத்தது. அப்போது இதனை விடவும் ஒழுங்குபடுத்தல்கள் முறைமைகள் இருந்தன. இந்நிலையில் இன்று இந்த சட்டமூலத்தை கொண்டுவந்த குழுக்களே அன்று இந்த சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தன. அந்த குழுவே இதுபோன்ற சட்டமூலத்தை கொண்டுவருவது ஆச்சரியமாக இருக்கின்றது. எவ்வாறாயினும் இந்த சட்டமூலம் நிறைவேற்றப்படாது. மஹிந்த ராஜபக்ஷ தனியார் மயப்படுத்தலுக்கு எதிர்ப்பு என்றே தெரிவித்திருந்தார். பொதுஜன பெரமுனவினர் எப்படி சட்டமூலத்திற்கு ஆதரவாக கையுர்த்துவர். அணிந்திருக்கும் ஆடையைதான் தூக்க வேண்டி வரும். நாங்கள் முன்வைக்கும் திருத்தங்களை ஏற்றுக்கொண்டால் நாங்கள் ஆதரவளிப்போம். இல்லாவிட்டால் நிறைவேற்றுவதை ஏற்க மாட்டோம் என்றார்.

# “காணி பிரச்சினை தீர்க்கப்படாத பிரச்சினை”

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (06) வடக்கு கிழக்கு காணி விவகாரம் தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் மேலும் பேசுகையில்,வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யுத்தம் நிறைவடைந்த பின்னரும் அந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பேணுவதற்கான காணி பயன்பாட்டுப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையாகவே உள்ளது. குடியிருப்புகளைச் சுற்றியுள்ள பெரும்பாலான இடங்கள் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாக வர்த்தமானி வெளியிடப்பட்டிருத்தல் இதற்கு காரணமாகும். அவ்வாறே மக்களுக்கான காணிகளை விடுவிப்பதில் அரசாங்கத்தின் நடவடிக்கைகளிலும் பல பிரச்சினைகள் காணப்படுவதும் இதற்கு காரணமாக அமைகின்றது.

1985 ஆம் ஆண்டு நில அளவீட்டு வரைபடத்தின் படி, பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி மற்றும் எஞ்சிய காடுகள் விடுவிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், விடுவிப்பதற்காக அடையாளம் காணப்பட்டுள்ள அல்லது பிரதேச செயலாளர்களினால் விடுவிக்கக் கோரப்பட்டுள்ள காணியின் அளவு என்ன?

அம்பாறை, மொனராகலை, திருகோணமலை மாவட்டங்களுக்கு, வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு அண்மையில் விஜயம் செய்த போது அவர்களது பாரம்பரிய விவசாய நிலங்கள் பறிபோயுள்ளமை தெரிய வந்தது. இந்நிலையில் மீண்டும் தரப்படும் என அரசு கூறினாலும் அது இன்றுவரை வார்த்தையோடு சுருங்கிப்போயுள்ளது. அரசாங்கம் வழங்கிய இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் திகதி என்ன?

வனவுயிர் மற்றும் விருட்சங்கள் பாதுகாப்பு கட்டளைச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாகவும் உத்தேச நீர்வாழ் உயிரின வளர்ப்பு பேட்டையை தாபிக்கும் பொருட்டும் அல்லது கடல் பாதுகாப்பு என இனங்காணப்பட்டுள்ள நிலப்பிரதேசத்தை விடத்தல் தீவு இயற்கை ஒதுக்கத்தின் எல்லையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கூறுகின்றனர். எனவே இதன் உண்மையை நிலை என்ன?

மேலும் விவசாயிகள் பாரம்பரியமாக விவசாயத்தை மேற்கொண்டு வரும் விளைநிலங்களை பாதுகாக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். வனவளத்தைப் போன்று விவசாயமும் பாதுகாக்கப்பட வேண்டும்

பாரம்பரிய விவசாய நிலங்கள் விடுவிக்கப்படும் என ஜனாதிபதி பல்வேறு மாவட்டங்களுக்கான தனது விஜயத்தின் போது உறுதியளித்துள்ள போதிலும் அது பேச்சளவில் மட்டுமே இருந்து வருகிறது. பதவி ஸ்ரீபுர, கோமரங்கடவல, மொரவெவ, கந்தளாய், சேருவில, வெருகல், அம்பாறை, மொனராகலை மாவட்டங்களிலும் வடக்கிலும் இந்தப் பிரச்சினை நிலவி வருகிறது. அவர்களின் விவசாய நிலங்கள் விடுவிக்கப்படும் வரை மக்கள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் என்றார்.



# ஆரோக்கிய வாழ்விற்கு ஆரோக்கிய உணவுமுறை

## இன்று உலக உணவு பாதுகாப்பு தினம்

ஆண்டுதோறும் ஜூன் 7ம் திகதி உலக உணவு பாதுகாப்பு தினமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இது ஒரு சர்வதேச நிகழ்வு ஆகும். உணவுப்பழக்க நோய்கள் மற்றும் அவற்றின் தடுப்பு, மேலாண்மை நுட்பங்கள் மற்றும் உணவு பாதுகாப்பு, நல்வாழ்வு மற்றும் நிலையான வளர்ச்சியை உறுதி செய்தல் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதை இந்த தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

தற்போது வைரஸில் இருந்து பாதுகாத்துக்கொள்ள தடுப்பூசி, கொரோனா நடத்தை விதிமுறைகள் ஆகியவை எவ்வளவு முக்கியமோ, ஆரோக்கியமான உணவுகளை எடுத்துக்கொள்வதும் முக்கியம். அந்த வகையில், மக்களிடையே பாரம்பரிய உணவுகளின் முக்கியத்துவமும் பிரபலமாகி வருகின்றன. துரித உணவுகளால் ஏற்படும் சுகாதார அபாயங்கள் பற்றியும் பல எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் இன்று உலக உணவு பாதுகாப்பது தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த தினம் உருவான வரலாறு மற்றும் அதன் முக்கியத்துவம் குறித்து நாம் தெரிந்துகொள்வது அவசியம்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபையால் 2018ல் அறிமுகப்படுத்தப்பட்ட உலக உணவுப் பாதுகாப்பு தினம் உலகெங்கிலும் சில உணவால் பரவும் நோய்களைத் தடுத்து இறுதியில் அவற்றை ஒழிப்பதை நோக்கமாக கொண்டுள்ளது. இது WHO மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் கூட்டு முயற்சி ஆகும்.

உலகளவில் உணவு மூலம் பரவும் நோய்களால் ஏற்படும் சுகாதார அபாயங்களை அகற்ற பிற உறுப்பு நாடுகள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறது.

சுகாதாரப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான மிக மோசமான தேவை கொரோனா நெருக்கடியில் நிலவுவதை போல முன்னெப்போதும் இருந்ததில்லை. நோய் எதிர்ப்பு சக்தியை வலுப்படுத்துவது, உணவுப்பழக்க நோய்கள் பரவுவதை அகற்றுவது, விவசாய களங்களில் ஆரோக்கியமான, சுகாதாரமான நடைமுறைகளை வளர்ப்பது, சந்தை மற்றும் உணவு பரிவர்த்தனைகளை உள்ளடக்கிய எல்லா இடங்களிலும் இது மிகவும் இன்றியமையாததாகிவிட்டது.

உலக உணவுப் பாதுகாப்பின் முயற்சி எப்போதுமே உலகெங்கிலும் உணவு மூலம் நோய்களின் அபாயங்களைத் தணிப்பதாகும். உலக உணவுப் பாதுகாப்பு தினத்தில் சில முக்கிய குறிக்கோள்கள் நிறைவேற்றப்படும். அவை, எல்லாவற்றிற்கும் மேலாக, உணவு பாதுகாப்பு என்பது அனைவரின் வணிகமாகும். 200 வகையான உணவுப்பொருள் நோய்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இவற்றில் தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள், பாக்டீரியா, வைரஸ்கள் ஆகியவற்றால் ஏற்படுகின்றன. புள்ளிவிவர தகவல்களின்படி ஒவ்வொரு ஆண்டும் சுமார் 600 மில்லியன் மக்கள் இத்தகைய உணவு வகை நோய்களுக்கு இரையாகின்றனர் என்பதைக் காட்டுகிறது. சுகாதாரமற்ற உணவு நுகர்வு காரணமாக 5 வயதுக்குக் குறைவான வயதுடைய குழந்தைகள் மற்றும் வறுமையில் வாடும் பிரிவுகளை சேர்ந்த குழந்தைகள் நோய்களுக்கு ஆளாகின்றன. அறுவடை, பதப்படுத்துதல், சேமித்தல், நுகர்வுக்கு விநியோகித்தல் போன்ற கட்டங்களிலிருந்து உணவைப் பாதுகாப்பதற்கான முழுமையான அணுகுமுறையை உணவுப் பாதுகாப்பு உட்படுத்துகிறது.



தயாசிறியை நீக்கிய விவகாரம்:

# மைத்திரிக்கு கால அவகாசம்

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக கடமையாற்றிய தயாசிறி ஜயசேகரவின் கட்சி உறுப்புரிமையை இரத்து செய்து வெளியிடப்பட்ட கடிதம் மீளப்பெறப்படுமா, இல்லையா என்ற தீர்மானத்தை அறிவிப்பதற்கு பிரதிவாதியான மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டோருக்கு உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கியது.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதவியிலிருந்து தம்மை நீக்கியமைக்கு எதிராக தயாசிறி ஜயசேகரவினால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு உயர் நீதிமன்றத்தில் வியாழக்கிழமை (06) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

இந்த மனு உயர் நீதிமன்ற நீதியரசர்களான A.H.M.D.நவாஸ், ஜனக் டி சில்வா, பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரருக்கு எதிரான கடிதத்தை மீளப்பெறுவதா, இல்லையா என்ற தீர்மானத்தை அறிவிப்பதற்கு தமது சேவை பெறுநருக்கு கால அவகாசம் தேவைப்படுவதாக மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தவிசாளர் மைத்திரிபால சிறிசேன, பதில் பொதுச் செயலாளர் சரத் ஏக்கநாயக்க ஆகியோர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

இதற்கிணங்க, இரண்டு வார கால அவகாசம் அளித்து, அடுத்த அமர்வில் தமது தீர்மானத்தை தெரிவிக்குமாறு, மனுதாரர்களுக்கு நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

தம்மை கட்சி உறுப்புரிமையிலிருந்தும் பொதுச்செயலாளர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எடுத்த தீர்மானத்திற்கு எதிராக தயாசிறி ஜயசேகர கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

எனினும், தயாசிறி ஜயசேகரவை நீக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதைத் தடுக்கும் தடை உத்தரவை பிறப்பிக்க கொழும்பு மாவட்ட நீதிமன்றம் மறுத்துவிட்டது.

அந்த தீர்மானத்தை எதிர்த்து மேல் மாகாண சிவில் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றில் தயாசிறி ஜயசேகர மீண்டும் மனுவொன்றை தாக்கல் செய்த போதிலும், அதற்கான தடை உத்தரவை பிறப்பிக்க அந்த நீதிமன்றமும் மறுத்துவிட்டது.

அதனையடுத்து, குறித்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தயாசிறி ஜயசேகர உயர் நீதிமன்றில் இந்த மேன்முறையீட்டு மனுவை சமர்ப்பித்துள்ளார்.

இந்த மனு ஜூன் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

# மும்முனை திட்டத்தை செயல்படுத்த முடிவு



கம்பஹா மாவட்டத்தை எதிர்காலத்தில் வெள்ளத்தில் மூழ்கடிப்பதைத் தடுப்பதற்காக அனைத்து அரச நிறுவனங்களையும் உள்ளடக்கிய கூட்டு வழிநடத்தல் குழுவொன்று நியமிக்கப்படும் என அமைச்சு அறிவித்துள்ளது.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் அறிவுறுத்தலின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. எஸ் சத்தியானந்த மற்றும் கம்பஹா மாவட்ட செயலாளர் லலிந்த கமகே ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டமும் கம்பஹா நகரமும் எதிர்காலத்தில் வெள்ளத்தில் மூழ்காமல் இருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து கலந்துரையாடல் கம்பஹா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் புதன்கிழமை (05) இடம்பெற்றது.

இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் திட்டமிடல்) பொறியியலாளர் கே.எச். கீர்த்திரத்ன இங்கு மூன்று அம்ச நிகழ்ச்சிகளை வழங்கினார்.

இந்த மும்முனை திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை நியமிக்கப்பட்ட கூட்டு வழிநடத்தல் குழுவிடம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

மத்திய மற்றும் நீண்ட கால வேலைத்திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை காணி அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப் பொது முகாமையாளர் கீர்த்திரத்ன கூறினார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் இலங்கை காணி அபிவிருத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார்.

# ‘ஜயகமு ஸ்ரீ லங்கா’

‘ஜயகமு ஸ்ரீ லங்கா’ ஜூன் 7 மற்றும் ஜூன் 8 ஆம் திகதிகளில் திருகோணமலை “மக்கைசர்” விளையாட்டரங்கில் நடைபெற உள்ளது என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காராவின் எண்ணக்கருவில் நாடளாவிய ரீதியில் இத்தேசிய வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பிரதான காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள வேண்டிய சேவைகள் சிலவற்றை இப்பகுதி மக்கள் இந்த நடமாடும் சேவையின் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மீன்களுடன் படகை மடக்கிய மீனவர்கள்

■ சண்முகம் தவசீலன்




முல்லைத்தீவு கடற்பகுதியில் தடைசெய்யப்பட்ட தொழில் உபகரணங்களை பயன்படுத்தி பெருமளவான மீன்களை பிடித்துக்கொண்டு சென்ற படகு ஒன்றினை முல்லைத்தீவு மீனவர்கள் பிடித்து கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடி தொழில்கள் அதிகரித்துள்ளதாகவும் இதனை கட்டுப்படுத்துமாறு தொடர்ச்சியாக மீனவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றபோதும் இது தொடர்பில் கடற்படை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகள் முல்லைத்தீவு கடற்பரப்பில் தொடர்ச்சியாக இடம்பெறுவதால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் மக்கள் தெரிவித்துவந்தனர்.

இந்நிலையில் கொக்கிளாய் பகுதியில் இருந்து மாத்தளன் பகுதிக்கு சென்று சட்டவிரோத மீன்பிடி ஊடாக அதிகளவான மீன்களைப் பிடித்துக் கொண்டு மீண்டும் கொக்குளாய் திரும்பிய வழியிலே குறித்த படகை முல்லைத்தீவு மீனவர்கள் வழிமறித்து கொண்டு வந்து கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

சுமார் 700 கிலோ கிராம் வரையான சூடை மீன்கள் படகில் கணப்பட்டுள்ளதுடன் சட்டவிரோதமான முறையில் இந்த மீன்கள் பிடிக்கப் பட்டுள்ளதாக தெரியவந்துள்ளதுடன் ஒளிபாச்சிகள்(லைட்), பற்றிகள்,என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

இதன்போது கொக்கிளாய் பகுதியினை சேர்ந்த கடற்தொழிலாளி ஒருவரும் கைது செய்துள்ளப்பட்டுள்ளார். சான்றுப் பொருட்களும் குறித்த நபரும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தினர் ஈடுபட்டுள்ளார்கள்.

# மரநடுகை



■ பாறுக் ஷிஹான்

உலக சுற்றாடல் தினம் மற்றும் தேசிய சுற்றாடல் வாரத்தினையொட்டி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஏற்பாடு செய்யப்பட்ட மர நடுகையும் சிரமதான நிகழ்வும் புதன்கிழமை (05) இடம்பெற்றது.

பிராந்திய சுற்றுச்சூழல் தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.எஸ்.எம். பௌசாத் ஒருங்கிணைப்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பிராந்திய பணிமனை வளாகம் சிரமதானம் செய்யப்பட்டதுடன் மர நடுகையும் இடம்பெற்றது. இதேவேளை மாவடிப்பள்ளியில் அமைந்துள்ள பிராந்திய உயிரியல் மருத்துவப் பிரிவு வளாகத்திலும் மரநடுகை நிகழ்வொன்று வியாழக்கிழமை (06) இடம்பெற்றது.

# விவசாய இரசாயன பொருட்கள் சிக்கின



■ ரஸீன் ரஸ்மின்

இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பெருந்தொகை விவசாய இரசாயன பொருட்கள் கற்பிட்டி , ஏத்தாளை பகுதியில் வைத்து புதன்கிழமை (5) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கற்பிட்டி கடற்படையினர் ஏத்தாளை எரம்புகொடல்ல கடல் பிரதேசத்தில் மேற்கொண்ட விஷேட சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது, இந்தியாவில் இருந்து இயந்திரப் படகு மூலம் கற்பிட்டி , ஏத்தாளை கடற்பிரதேசத்தில் இறக்கப்பட்டு, இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கில் எடுத்துச் செல்ல முற்பட்ட போதே மேற்படி விவசாய இரசாயன பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இதன்போது, 31 மூடைகளில் அடைக்கப்பட்ட இரசாயன மருந்துகள், கிருமிநாசினிகள், களை நாசினிகள் மற்றும் இலங்கையில் தடை செய்யப்பட்ட இரசாயன உர வகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்ற விவசாய இரசாயன பொருட்களை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தமது பொறுப்பில் வைத்திருப்பதாகவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விரும்பும் உணவு இன்றேல்: உணவுப் பாதுகாப்பு இல்லை

சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தின் படி, ஒரு நபரின் உணவுக்கான உரிமை அடிப்படை மனித உரிமையாகும். மேலும், எந்த நாடும், எந்த ஒரு மக்கள்தொகைக் குழுவும் பட்டினிச் சாவு ஏற்படும் வகையில் செயல்படக் கூடாது, உணவு வழங்குவதைத் தடுப்பது போர் தந்திரமாக சர்வதேச சட்டத்தின்படி கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில்தான், உணவு பாதுகாப்பு தினம் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 7ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்படுகின்றது.

நாட்டில், போதுமான உணவு இருப்புகளைப் பராமரிப்பதில், நாட்டின் தற்போதைய இருப்பு நிலைமைக்கு கவனம் செலுத்துவது முக்கியமானது. கடந்த காலத்தில் எவ்வளவு உணவு உற்பத்தி செய்யப்பட்டது? எவ்வளவு இறக்குமதி செய்யப்படுகிறது?அத்தகைய தகவல்கள் அனைத்தும் அடிக்கடி மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் எவ்வளவு உற்பத்தி நடக்கும்? அது போதுமானதா, இல்லை என்றால் இறக்குமதி செய்வது என்பது குறித்து தொடர்ந்து கண்காணிப்பு இருக்க வேண்டும். இல்லையெனில், இயற்கைப் பேரிடர் ஏற்படும் போது, அவசரகால கொள்முதல் அதிக விலைக்கு செய்யப்பட வேண்டும், இது ஒரு நாட்டிற்கு பெரும் நஷ்டத்தை ஏற்படுத்தும்.

போதுமான உணவு இருப்பு வைத்திருப்பதால் மட்டும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாது. நாட்டின் அனைத்து மக்களும் பொருளாதார ரீதியாக உணவை வாங்கும் வகையில் உணவு விலை நிலைகள் பராமரிக்கப்பட வேண்டும்.

அவ்வாறு செய்ய முடியாதவர்களுக்கு சமூக பாதுகாப்பு நடவடிக்கைகள் மூலம் நிவாரணம் வழங்க வேண்டும். நாட்டின் ஒவ்வொரு பிரிவினரும் அவர்கள் விரும்பும் உணவைப் பெற முடியாவிட்டால், அத்தகைய நாட்டில் உணவுப் பாதுகாப்பு இல்லை.

குடும்பத்தில் உள்ள அனைத்து உறுப்பினர்களும் அவர்களின் வயது, பாலினம், நோய், கர்ப்பம், உடல் செயல்பாடு போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, அவர்களின் ஊட்டச்சத்து தேவைகள் மற்றும் சுகாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உணவைப் பெறுவதற்கான திறன் ஆகும்.

இல்லையெனில், குடும்பம் மற்றும் நாட்டின் பெரும்பான்மையானவர்கள் ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் ஊட்டச்சத்து தொடர்பான நோய்களால் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது. குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு உணவின் மூலம் சரியான ஊட்டச்சத்து கிடைக்காவிட்டால், அவர்களின் உடல் மற்றும் மன வளர்ச்சி குறைந்து, குருட்டுத்தன்மை ஏற்பட்டு, அந்த தலைமுறை சமூகத்திற்கு பொருளாதார ரீதியாக பயன்படாத நபராக மாறக்கூடும்.

உணவுப் பாதுகாப்புக் கூறுகளில் ஏதேனும் இடையூறு அல்லது முறிவு ஏற்பட்டால் உணவுப் பாதுகாப்பின்மை எதிர்கொள்ளப்படுகிறது. கொவிட் -19 தொற்றுநோய்க்கு முன்பே, உலகில் ஏராளமான மக்கள்உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர், சுமார் 800 மில்லியன் மக்கள் தினசரி அடிப்படையில் போதுமான உணவு இல்லாமல் அவதிப்படுகிறார்கள்.

அவர்களின் உணவுப் பாதுகாப்பின்மைக்கு வறுமையே அடிப்படைக் காரணம். வறுமையில் வாடும் மக்களில் பெரும்பாலானோருக்கு சொந்தமாக இருப்பிடமோ, நிலமோ இல்லை. அவர்களால் தங்களுக்கான உணவை வாங்கவோ அல்லது உற்பத்தி செய்யவோ முடியவில்லை. பட்டினி கிடப்பது அவர்களின் அன்றாட வாடிக்கையாகிவிட்டது. சரியான உணவு இல்லாததால் ஊட்டச்சத்து குறைபாடு என்பது மரபுவழியாகிவிட்டது.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

வேண்டப்பட்டவர்களுக்கு வேண்டப்படும் உண்மைகளை மறைக்கக்கூடாது. இன்றைய உலகத்தில் தமக்குப் பிடித்தவர்களுக்காக நீதிக்குப் புறம்பானவற்றைத் தாராளமாகக் செய்துவருகின்றார்கள்.

உண்மையை மறைப்பது எதிர்வினையை உண்டாக்கும். ஆனால், சத்தியத்திற்குச் சாவில்லை. மறைந்து நின்று அதன் வலிமையைக் காட்டும்.

உலகம் பெற்றுவரும் அனுகூலங்களை, மனிதன் மறைமுகமாகத் திருடுகின்றான். பல தடவைகள் கஷ்டப்பட்டு இயற்கை வளத்தை பெருக்காமல், மிகச் சுலபமாக அதில் கைவைத்து சுய லாபங்களுக்காக அழிக்க முற்படுகின்றான்.

இது எதிர்கால வாரிசுகளுக்குச் செய்யும் துரோகமுமாகும். நீர் நிலைகளில் வீடு கட்டுதல், மகாபாவம். இது நீர்வளம் பெருகுவதை தடுக்கும் செயலாகும்.

அடாத செயல்களை அழிப்பது தவறானது எனும் கருத்தை உதறிச் செயல்படுவது சுயநலத்தின் கோர்வையாக வளர்ந்துவிட்டது.

உண்மை நிலைகளை மறந்து கிடைப்பததைச் சுருட்டுவதே பெரும் இலாபம் எனக் கருதும் நிலை உருவாகிவிட்டது. அறம் என்பது உண்மையின் வடிவத்தில் ஒன்று. அறவழியே நிரந்த அமைதி.

பருத்தியூர்
பால-வயிரவநாதன்



தெ. ஞாலசீர்த்திமீநிலங்கோ

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 3

## போரின் முடிவும் இந்திய நலன்களும்

ஈழத்தமிழருக்கான தீர்வை இந்தியா பெற்றுத்தரும் என்று நம்பியோர் இருந்தனர். இன்னமும் இருக்கின்றனர். மோடியின் வெற்றியின் வெடி கொழுத்திக் கொண்டாடியோரும், இந்தியாவில் பி.ஜே.பி ஆட்சிக்கு வந்தால் உடனடியாகப் போர் முடிவுக்கு வரும் என்று விடுதலைப்புலிகளுக்குக நம்பிக்கை ஊட்டியோரும் இருந்துள்ளர்.

ஆனால் ஈழத்தமிழர் விடயத்தில் இந்தியாவின் வகிபாகம் என்பதை வரலாற்றுவழிப்பட்டு விமர்சன ரீதியில் நோக்குவோர் மிகக் குறைவு.

2019இல் போர் உச்சக்கட்டத்தை அடைந்தபோது இலங்கைத் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக மீண்டுமொரு முறை எழுந்த தமிழக மக்களின் உணர்வலைகள் இந்திய மத்திய அரசு அசைத்தது. ஆனால் அது விரைவிலேயே திசைமாற்றப்பட்டு அடக்கப்பட்டது. இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வில் இந்தியா முக்கிய பாத்திரத்தை ஆற்றி வந்திருக்கிறது. அது நன்நோக்கிலான பாத்திரமல்ல. நோர்வேயின் உதவியுடனான அமைதிப் பேச்சுவார்த்தைகளில் இந்தியக் குறுக்கீடு விஷமத்தனமானது.

இந்தியா அதில் சம்பந்தப்படவில்லை என்று கூறிக்கொண்டு ஒவ்வொரு கட்டப் பேச்சுவார்த்தையின் பின்பும் நோர்வேயின் ஒவ்வொரு கலந்துரையாடலின் பின்பும் நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்கைமை டில்லியில் விசாரணைக்குட்படுத்தி வந்தது.

இந்தியாவிற்குக் கீழ்ப்படிவானவரல்லாத எவரும் இலங்கையின் எப்பகுதியிலும் அதிகாரத்திலிருக்கக்கூடாது என்ற நோக்கத்தைப் பற்றி இந்திய அதிகார நிறுவனம் எந்த விதமான இரகசியத்தையும் பேணவில்லை.

விடுதலைப்புலிகள் பற்றி இந்திய அதிகார நிறுவனம் 1987ம் ஆண்டிலோ, அதற்கு முன்னரோ ஒரு முடிவை எடுத்து விட்டது. அதில் அடிப்படையான மாற்றம் எதுவும் இல்லை.

விடுதலைப்புலிகளைப் பற்றிய வன்மம் வெளிப்படையாகவே காட்டப்படுவதற்கு, ராஜீவ் காந்தியின் கொலை வசதி செய்தது. ராஜபக்ச ஆட்சி போரைத் திரும்பவும் தொடங்கித் தீவிரப்படுத்தியதில் இந்தியாவின் ஆதரவுக்கு முக்கியமான பங்கிருந்தது. 2007 முதல் அது இந்தியப் படையினரின் நேரடியான பங்கு பற்றுதலாகியது. இவை இப்போது பேசப்படாத பக்கங்கள்.

இந்தியாவின் பிராந்திய மேலாதிக்க நோக்கங்கட்கு இலங்கை அரசின் மீதான செல்வாக்கு முக்கியமானது.

இந்திய நலன்கட்குச் சாதகமாக அல்லது இந்திய நலன்கட்குக் கேடு செய்யாத விதமாக இலங்கை அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவக் குறுக்கீடு உதவாது. இலங்கை மீதான பொருளாதாரப் பிடி வலுவடைந்து வருகிற ஒரு சூழ்நிலையில் இலங்கையின் அரசாங்கத்திற்கு உடந்தையாக இல்லாமல் ஒரு இராணுவக் குறுக்கீடு இந்திய மேலாதிக்க நோக்கங்கட்குப் பாதகமாகவே அமையும்.

1987-89 காலகட்டக் குறுக்கீடு இலங்கை அரசாங்கத்தின் உடன்பாட்டுடனே மேற்கொள்ளப்பட்டு முடிவில் வேறு விதமாக அமைந்தாலும் இலங்கை அரசாங்கத்துடன் மட்டுமன்றி ஜே.வி.பி., ஹெல உறுமய உட்பட்ட தீவிர பேரினவாதக் கட்சிகளுடனும் தனது செல்வாக்கை வளர்க்க இந்திய அதிகாரபீடம் பின்நிற்கவில்லை.

2000ஆம் ஆண்டில் இந்த இரண்டு கட்சிகளும் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் முன்னேற்றத்தைத் தடுக்க இந்திய இராணுவம் குறுக்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதைப் பலர் மறந்திருப்பார்கள்.

இறுதிக்கட்டப் போர் உச்சத்தை அடைந்திருந்த 2019இல் “பூனைக்கு விளையாட்டு எலிக்கு சீவன் போகின்றது” என்று ஒரு பழமொழி. தமிழகத்து அரசியல் பூனைகள் ஈழத் தமிழர் பிரச்சினை என்ற ஒரு எலியை வைத்து இன்னமும் விளையாடிக் கொண்டே இருக்கின்றன. இந்த விளையாட்டின் முக்கிய நோக்கம் தமக்கான கவன ஈர்ப்பு மட்டுமே. இலங்கைத் தமிழரின் இன்னல்கள் பற்றிய கவலை தமிழகத்தில் உள்ளவர்களிடம் வலுவாக உள்ளது.

ஆனால் அவர்களால் பயனுற எதையும் செய்ய இயலாத படி அவர்களை ஏமாற்றி தமிழக இனவாத அரசியல் நடத்துகின்ற கூட்டத்தாரும் பல்வேறு ஏமாற்றுத் தலைமைகளும் செயற்படுகின்றன. தேர்தலில் தோற்ற பிறகு கருணாநிதிக்கு தமிழீழம் கூட நினைவிற்கு வந்துள்ளது. கருணாநிதியின் கடைக்கு எதிர் கடை விரிக்க ஜெயலலிதாவுக்கும் முடிகிறது.

அதற்கும் அப்பால் கோபால சாமி, சீமான், நெடுமாறன், போன்றோரின் விசமத்தனமான கோமாளித்தனங்களும் அரங்கேறுகின்றன.

எனினும் இவற்றில் எதுவுமே டில்லி தர்பார் இலங்கைக்காக வைத்துள்ள திட்டத்தை மாற்றியதுமில்லை, மாற்றப்போவதுமில்லை என்ற உண்மை தெரிந்தும் தெரியாமலும் இவர்கள் மீட்பர்களாகப் பார்க்கப்பட்டார்கள்.

தமிழகத்தின் திராவிடப் பாரம்பரியக் கட்சி எதுவுமே இலங்கைத் தேசிய இனப்பிரச்சினையைச் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை. அவற்றில் ஏகப்பெரும்பாலானவை தமது அரசியல் இலாபத்திற்காக ஈழத்தமிழரின் பிரச்சினையையும் அவலத்தையும் 1983 முதலாகப் பயன்படுத்தி வந்துள்ளன. ஆதன் தொடர்ச்சியையே இப்போது சீமான் அறுவடை செய்கிறார்.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்பு காங்கிரஸ் தனது விடுதலைப்புலி எதிர்ப்பையும் இலங்கைத் தமிழரின் போராட்ட எதிர்ப்பையும் தீவிரப்படுத்தியது. அ.தி.மு.க. அப்போது காங்கிரசுடன் இணைந்து நின்றதால் அதன் நிலைப்பாடு அன்று முதல் காங்கிரஸ் நிலைப்பாட்டை ஒத்ததாகவே இருந்து வந்தது.

2009 அவலம் நிகழும் வரை,ஜெயலலிதா ஈழப் பிரிவினையையும் விடுதலைப்புலிகளையும் கடுமையாக எதிர்த்தவராவார். ராஜீவ் காந்தியின் கொலையால் தேர்தலில் தோல்வி கண்ட தி.மு.க., விடுதலைப்புலி கட்குப்பகைமையான ஒரு நிலைப்பாட்டை எடுத்தாலும் அதைப் பகிரங்கமாக அறிவிக்காது இயங்கியது.

ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாட்டைப் பேசிப்பேசியே தமது சிறிய ஆதரவுத் தளங்களைப் பேணி வந்த வை. கோபால்சாமி, பழ. நெடுமாறன் போன்றோரும் சாதி அரசியல் செய்யும் பாட்டாளி மக்கள் கட்சியும்,இலங்கையின் பேரினவாத அரசுக்கு ஆதரவளித்த இந்திய பாராளுமன்ற ஆளுங்கட்சிகளுடனும் கூட்டணி வைக்கத் தயங்காதவர்கள் என்பதைக் காலம் எமக்குக் காட்டியுள்ளது.

பா.ஜ.க ஆட்சிக்க வந்தால் ஈழத்தமிழருக்கு விடிவு கிடைக்கும், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான நிலைப்பாட்டை அக்கட்சி எடுக்கும் என்று தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனால் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி உருவான போது விடுதலைப் புலிகள் மீதான தடை புதுப்பிக்கப்பட்டது என்பது, அரச இயந்திரமும் ஆளும்வர்க்க நலனும் ஆளுங்கட்சிக்கு அப்பாற்பட்டவை என்பதையும் பா.ஜ.கவுக்கும் காங்கிரசுக்கும் ஒரே மேலாதிக்க கொள்கையே உள்ளது என்பதையும் நினைவூட்டின.

போரின் முடிவின் பின்னர் தமிழக அரசியற் கூத்தாடிகள் நடத்திய நாடகங்கள் வெறும் ஈழத் தமிழர் ஆதரவுடன் நிற்பதில்லை. தேவையற்ற வன்முறைகளுக்கு தீ மூட்டின. குறிப்பாக தமிழகத்தில் சிங்களவர்கள் மீதான தாக்குதல்களும், இந்தியாவில் இருந்த இலங்கை வங்கி மீதான தாக்குதலும் கண்டிக்கப்பட வேண்டியன.

ஆனால் பொறுப்புள்ள ஈழத்தமிழ் அரசியல் கட்சிகள் இதைக் கண்டிக்கத் தவறின. இந்நிகழ்வுகள் தென்னிலங்கையின் பேரினவாதிகளின் கவனத்தை ஈர்த்தன. இவ்வாறான விடயங்களை அவர்கள் தமிழக-தமிழீழவாதச் சதி என்று சித்தரிக்கிறார்கள். நியாயமற்ற ஒவ்வொரு வன்செயலும், சிங்களப் பகைமையான கருத்தும் சிங்கள் மக்கள் நடுவே தமிழர் பற்றிய ஐயங்களையும், வெறுப்பபையுமே தூண்டிவிட வல்லன.

இன்று முழுச் சர்வதேசமும் சிங்கள மக்களுக்கு எதிராகச் சதி செய்கின்றது என்ற மாயையை வளர்த்து அதன் மூலம் தன்னைத் தக்க வைக்க முயலுகிற மகிந்த சிந்தனை ஆட்சிக்கு தமிழகத்தின் சுயலாப அரசியல் வாதிகளின் செயல்களும் உதவின.

இந்தப் பயணற்ற காரியங்களை விடுத்துத் தமிழ் மக்கள் தமது நிலைமையையும் தமது தேவைகளையும் சரிவர அறியவும் தமக்கான அரசியற் போராட்டப் பாதையை வகுக்கவும் நமது தமிழ் ஊடகங்களும் அரசியல்வாதிகளும் பொறுப்பான பாத்திரத்தை வகிக்கத் தவறின.

2009இன் பின்னரான நிகழ்வுகளில் இருந்து நாம் சில பாடங்களை நினைவில் கொள்வது நல்லது. தமிழகத்தின் அரசியற் கோமாளித்தனங்கள் சிலருக்கு ஒரு நிமிட நேரக் கிறுகிறுப்பை ஊட்டலாம். அதன் பிறகு அதனால் ஒரு பயனும் கிடையாது. நமக்கு பேச, சிந்திக்க, நிறைவேற்ற நிறைய விடயங்கள் உள்ளன. இனியேனும் அவற்றைப் பற்றி சிந்திப்பது நல்லது.

உணர்ச்சிவசமான குறுந்தமிழ்த்தேசியவாத அரசியலுக்கு அப்பால் அறிவு பூர்வமான,அர்த்தமுடைய, யதார்த்தத்திற்குப் பொருந்தி வரக்கூடிய மக்கள் அரசியலை பேச முன்வரல் வேண்டும்.

தமிழக மக்கள் இலங்கைத் தேசிய இனப்பிரச்சனையின் தீர்வு தொடர்பாக ஒரு பொதுவான நிலைப்பாட்டுக்குக் கொண்டுவர இயலும். அது அவசியமானதுங் கூட. சுய நிர்ணய அடிப்படையிலான சுயாட்சி என்பதையும் இலங்கையின் சகல தேசிய இனங்களதும் சமத்துவம் என்பதையும் தமிழகத்து மக்கள் மத்தியில் பிரசாரப்படுத்தித் தெளிவுபடுத்த இயலுமானால் அது பிற மாநிலங்களிலும் ஆதரவைப் பெறக் கூடிய ஒரு குறைந்தபட்சக் கோரிக்கையாக அமையும். அதற்கான ஆற்றலும் வாய்ப்பும் உண்டு. அதை இந்தியா அதிகாரவர்க்கத்திடம் மண்டியிடுவதன் மூலம் சாத்தியமாக்க முடியாது.

## கடிதங்கள்



### காணிகளை துப்பரவு செய்யுங்கள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் குடியிருப்புகள் மத்தியில் துப்பரவு செய்யப்படாமல் பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்ற காணிகளை பிரதேச செயலகம் துப்பரவு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என பொது அமைப்புகளினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

2010 ஆம் ஆண்டின் பின்னர் அரச காணிகள் பல மாவட்டத்தில் பற்றைகள் வளர்ந்து காணப்படுவதினால் குடியமர்ந்துள்ள குடும்பங்கள் ஆபத்துகளை எதிர்கொண்டு வருவதோடு, கிராம அலுவலர்கள் மூலம் பிரதேச செயலாளர்களுக்கு தகவல்கள் வழங்கப்பட்ட போதிலும் நடவடிக்கைகள்எடுக்கப்படவில்லை.

காணியற்ற குடும்பங்கள் பல காணப்படும் நிலையில் தற்போது பற்றைகள் வளர்ந்து காணப்படுகின்ற அரச காணிகளை காணியற்ற குடும்பங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரச காணி என்பதன் காரணமாக பற்றைகளை துப்பரவு செய்வதற்கு பிரதேச செயலகங்கள் விரைவான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என பொது அமைப்புகளினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நடராசா கிருஸ்ணகுமார்

# The BeachFront II Uswetakeiyawa Residences கையளிப்பு









*Prime Group*, தனது நவீன வசதிகள் படைத்த *The Beach Front II Uswtakeiyawa* சொகுசு குடியிருப்புத் தொகுதியின் நிர்மாணப் பணிகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்து அதன் உரிமையாளர்களிடம் கையளித்துள்ளதாக அறிவித்துள்ளது. "*Keys to Paradise*" எனும் தலைப்பில் அண்மையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த கடற்கரைக்கு முகப்பாக அமைந்த சொகுசு தொடர்மனைத் தொகுதியின் பெருமைக்குரிய உரிமையாளர்களுக்கு இதன் போது அவர்களின் இல்லங்களுக்கான சாவிகள் கையளிக்கப்பட்டிருந்தன.

இந்த நிகழ்வின் போது இந்த தொடர்மனையின் சிறப்பான வடிவமைப்பு மற்றும் நிர்மாணம் போன்ற விடயங்கள் மாத்திரமன்றி, அதனை வடிவமைக்கும் போது தமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர்களுடன் *Prime Group* கட்டியெழுப்பியிருந்த உறுதியான உறவுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டிருந்தது. கொழும்பிலிருந்து 20 நிமிடங்களில் பயணிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ள சொகுசு தொடர்மனை "*The Key to Paradise*" இன்வெற்றியானது இலங்கையில் கடற்கரையோரத்தில் வாழ்வதற்கான ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தியுள்ளது.

2020 ஆகஸ்ட் மாதத்தில் *Beach Front II* நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. இன்று உஸ்வெட்டகெய்யாவ பிரதேசத்தில் காணப்படும் தங்கமான மணல் மற்றும் பாம் தாவரப் பகுதியில் சொகுசான வாழிடத்தை வழங்குவதாக அமைந்துள்ளது. 16 மாடிகளைக் கொண்ட பிரம்மிக்க வைக்கும் கட்டடக்கலை அம்சங்களைக் கொண்ட இந்தத் தொகுதியில் 108 அலகுகளில் ஒன்று மற்றும் இரண்டு படுக்கையறைகளைக் கொண்ட இல்லங்கள் மற்றும் பென்ட்ஹவுஸ்கள் ஆகியன 742 முதல் 2273 சதுர அடிப் பரப்பளவுகளில் காணப்படுகின்றன. இந்து சமுத்திரம் முதல் தெளிவான வானம் வரையில் சுற்றுப் புறச் சூழலை கண்டு தமது பொழுதை இரம்மியமாக செலவிடக்கூடிய வகையில் பிரத்தியேகமான சரணாலயமாக இந்த நிர்மாணம் அமைந்துள்ளது.

இந்நிகழ்வில் *Prime Group* இன் இணை தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா கருத்துத் தெரிவிக்கையில், "மற்றுமொரு தொடர்மனைத் தொகுதியின் பூர்த்தியாக மாத்திரம் இது அமைந்திருக்கவில்லை. மாறாக, பிரத்தியேக சமூகமொன்றின் உருவாக்கமாக அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தின் நிர்மாணக் காலப்பகுதியில் நாம் எதிர்நோக்கியிருந்த தடங்கல்கள், தடைகள் மற்றும் சவால்கள் பற்றி நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். எவ்வாறாயினும், அவற்றுக்கு நாம் வெற்றிகரமாக முகங்கொடுத்து, இன்றைய தினம் இந்த அழகிய, மிகச் சிறப்பான செயற்திட்டத்தை பூர்த்தி செய்து, உங்களுக்கு ஒப்படைக்க எம்மால் முடிந்துள்ளது. *Prime* இல் நாம் உங்களை எமது வாடிக்கையாளராக அன்றி, பெறுமதி வாய்ந்த பங்காளராகவே காண்கின்றோம். பொறுமை காத்து, எம்மீது உங்களின் நம்பிக்கையை தொடர்ந்து பேணியிருந்தமைக்கு நன்றி தெரிவிக்கின்றோம்." என்றார்.

இந்த தொகுதியின் பெருமைக்குரிய உரிமையாளர்களும் தமது சிந்தனைகளைப் பகிர்ந்திருந்தனர். கே. ரனித் சந்துஷான் பெரேரா மற்றும் கே டேமியன் சந்துனில் பெரேரா தமது கருத்துகளைத் தெரிவிக்கையில், "இந்தத் தொடர்மனைகள் சிறந்த காட்சியமைப்பைக் கொண்டுள்ளன. ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் இங்கு குளிர்மையான சூழல் காணப்படுகின்றது. *Prime* மற்றும் அவர்களின் இதர திட்டங்களை நாம் பரிந்துரைக்கின்றோம்." என்றனர். நொயெல் எல்.எஸ் ஜோசப் தெரிவிக்கையில், "இந்தத் திட்டத்தின் ஆலோசகராக பணியாற்றியிருந்ததுடன், இந்த தொடர்மனை ஒன்றின் உரிமையாளராக திகழ்வதையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். எம் அனைவருக்கும் இன்று மிகவும் மகிழ்ச்சிக்குரிய நாளாகும். நான் *Prime Group* இன் தொடர்ச்சியான வீட்டு உரிமையாளராக திகழ்கின்றேன்." என்றார். யு.பி. சஷிகா நிசன்சலா ஜயசுமன கருத்துத் தெரிவிக்கையில், "*Prime* ஐ என்னால் எவருக்கும் பரிந்துரைக்க முடியும், இது தொழிற்துறையில் நம்பிக்கையை வென்ற பெயராக அமைந்துள்ளது. இந்த தொடர்மனைக்கு மாறுவதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். எம் அனைவருக்கும் இது மகிழ்ச்சியூட்டும் நாளாகும். எமது புதிய இல்லத்திலிருந்து காணும் காட்சிகளைக் கண்டு, எமது பிள்ளைகளும் மிகவும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்." என்றார்.

# பிரதம நிறைவேற்று அதிகாரியாக தில்ஷான் ரொட்ரிகோ நியமனம்




கொழும்பு பங்குப்பரிவர்த்தனைக்கு வெளியிட்டிருந்த அறிவித்தலின் பிரகாரம், யூனியன் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி/பணிப்பாளர் பதவியிலிருந்து இந்திரஜித் விக்ரமசிங்க 2024 ஆகஸ்ட் 15 ஆம் திகதியுடன் ஓய்வு பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. வங்கியின் வழிமுறை திட்டமிடலின் பிரகாரம், ஒழுங்குபடுத்தல் அனுமதி கிடைக்கும் பட்சத்தில், தற்போதைய பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரி தில்ஷான் ரொட்ரிகோ, 2024 ஆகஸ்ட் 16 ஆம் திகதி முதல் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி எனும் பொறுப்பை ஏற்பார்.

உள்நாட்டு மற்றும் பல்தேசிய நிறுவனங்களில் நுகர்வோர் பொருட்கள் மற்றும் நிதிச் சேவைகள் துறைகளில் 35 வருடங்களுக்கு மேலாக தொடர்ச்சியான நிர்வாக தொழில்நிலையை விக்ரமசிங்க கொண்டுள்ளார். காப்புறுதி, சொத்துகள் முகாமைத்துவம், பங்கு முகவராண்மை, சொத்துகள் முகாமைத்துவம், நிதி நிறுவனங்கள் மற்றும் வணிக வங்கியியல் போன்ற பல துறைகளில் பல்வேறு நிறைவேற்று அதிகாரமற்ற நிலைகளை வகித்துள்ளார். இலங்கை கொடுகடன் தகவல் பணியகத்தில் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக இவர் பணியாற்றியுள்ளதுடன், இலங்கை நிதிசார் குறைகேள் அதிகார (கெரன்டி) லிமிடெட்டின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

யூனியன் வங்கியில் ஒன்பது வருட காலப்பகுதிக்கு மேலாக பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி எனும் பதவியை வகித்துள்ளார்.

இவரது சேவைக் காலப்பகுதியில், சர்வதேச ரீதியில் புகழ்பெற்ற தனியார் பங்காண்மை குழுமமான Texas Pacific Group (TPG) பிரவேசித்து, இலங்கையின் நிதிச் சேவைகள் துறையில் மாபெரும் நேரடி வெளிநாட்டு முதலீட்டை மேற்கொண்ட நிறுவனம் எனும் நிலையையும் கொண்டிருந்தது. இந்த நிலைக்கு முன்னதாக NDB வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி எனும் நிலையை விக்ரமசிங்க வகித்திருந்தார். சகல வியாபார செயற்பாடுகளையும் மேற்பார்வை செய்வதற்கு இவர் பொறுப்பாக காணப்பட்டார்.

*Top of Form*

*Bottom of Form*

யூனியன் வங்கியில் இவர் அங்கம் வகித்த காலப்பகுதியில், மட்டுப்படுத்தப்பட்டளவு சொத்துகள் புத்தகத்தைக் கொண்ட வங்கி எனும் நிலையிலிருந்து சர்வாம்சங்களையும் கொண்ட வணிக வங்கி எனும் நிலைக்கு, ரூ.130 பில்லியனுக்கு அதிகமான சொத்துகளை கொண்ட வங்கியாக தரமுயர்த்தியிருந்தார்.

நாட்டில் அதியுயர் மூலதன போதுமை விகிதாசாரத்தை பேணும் நிலைக்கு வங்கியை தரமுயர்த்தியிருந்ததுடன், அண்மையில் அதன் கூட்டாண்மை அடையாளத்தை மீள அறிமுகம் செய்து, அதிகரித்துச் செல்லும் சந்தை வாய்ப்புகளை கையகப்படுத்திக் கொள்ளக்கூடிய நிலைக்கு கொண்டுவருவதில் முக்கிய பங்காற்றியிருந்தார்.

அனுபவம் வாய்ந்த வங்கியாளராக ரொட்ரிகோ திகழ்வதுடன், பல்வேறு தொழிற்துறைகளில் சிரேஷ்ட தலைமைத்துவங்களை வகித்துள்ளார். ஹற்றன் நஷனல் வங்கியின் நிறைவேற்று பணிப்பாளர்/பிரதம செயற்பாட்டு அதிகாரி எனும் நிலையை வகித்துள்ளார். வங்கியின் தலைமைத்துவ அணியுடன், நிறுவனத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு ரொட்ரிகோ தலைமைத்துவமளிப்பார்.

## அன்பான இம்சைக்காரி

அன்பான இம்சைக்காரி
அழகானகுறும்புக்காரி
என்பாவின் பொருளாயான
இதயத்துக் கொள்ளைக்காரி.

விழிவீச்சுஅம்பின்உருவோ
விளைகூந்தல் முகிலின்எழிலோ
மொழிப்பேச்சு தமிழின் சுவையோ
முறுவலில் முத்தின் ஒளியோ


தொடுவிரல் குளிரின் ஊற்றோ
தோகையாள் மின்னல் கீற்றோ
விடியலில் கதிரோன் தந்த
வியத்தகு பொன்னின் மலரோ.

இலையெனும் இடையும் பொய்யோ
இதழ்தரு அமுதம் தேனோ
கலையவள் உடலின்வடிவோ
கனிதமிழ் குரலின் சாறோ.


மலையெழு நதியைப் போல் வாள்
மனம்நிறை மதியையொப்பாள்
விலையிலாக் காதல் தந்தாள்
விண்ணவர் மகிழ்வைப் பெய்தாள்.

அவளுடன் வாழும்பேறு
அன்றுசெய் தவத்தின்வீறு
சுவையுடை நறவாள் என்னைச்
சொர்க்கத்தில் வைத்தாளன்றோ.

**கந்தவனம் கோணேஸ்வரன்**

## எரிந்தவாடை



கவி எழுத நினைத்தேன்
வார்த்தைதொலைந்துபோனது
நூலகம் எரிந்த நாற்றம்
காற்றிலாடும் வரை
சொற்களுக்கும் எட்டிப்பார்க்க பயம்

மெய்யும் பொய்யும் ஒன்றாய்
நீதியும் நேர்மையும் கானலாய்
அன்று இங்கு நடந்த கதை
இன்று எங்கெங்கோ அரங்கேறும்
காலக்கொடுமை சத்தியமாய் போன
தென்ன

கற்பனை குதிரை மேலேற ஆசைதான்
நிஜங்களை மறக்க வழியில்லையே
ஏதோ சொல்ல நினைத்தேன்
கவி எதையோ சொல்கிறது
உண்மைகள் மௌனிக்கும்
வேளை
வார்த்தைதான் என்
செய்யும்?

**-அருவி**



## காத்திருப்பு

வார்த்தைகளால் கொட்டித் தீர்க்க
முடியாதபொக்கிசங்கள் என்
பயணத்தில் உன் நினை வலைகள்

என்னைத் தாங்கிப் பிடித்து
கலங்காதே என்று உலகையே
மீட்டுக் கொடுத்த உன்னத உறவு நீ

பாச மழை பொழிந்து மதி மயங்கி
ஒன்று கலந்தநெஞ்சங்கள் மறக்க
மறந்து புலம்பித் தவிக்குதே

நீ பேசாத ஒவ்வொரு பொழுதும்
நரகமாகி நகன்கின்றதே என்னானதோ
எதானதோ என்ற ஏக்கத்துடன்

உலகமே இருண்ட மனிதனின்
வாழ்வில் ஒளியைப் பாய்ச்சிவிட்டு
இருளில் தள்ளுவது தகுமா

உயிர் கரைந்து கசியும் நிமிடங்கள்
ஆழியின் கரைகளில் சேர்த்துவிட்டு
அதற்கே எனை கொடுப்பது தகுமா

உன்னால் முடியும் என்று தட்டிக்
கொடுத்து பட்டைதீட்டிய நாட்களும்
கசந்து போகுதே

முடக்கியவழிகள் நேராக்கி
பிறவியின் அர்த்தம் சொல்லிய
வாழ்கைவலுவிழந்துதவிக்குதே

சுவாசம் இன்றித் தவிக்கும் உயிரின்
ஏக்கம் அறிந்து உயிர் கலந்து
மூச்சுக் காற்றை அளிப்பாயோ..!

**தௌபீக் முஹம்மது நவீத்**
**(புல்மோட்டையூரான்)**






## ஆசை

பஞ்சபூதச் சேர்க்கைதான்
இவ்வுலகம்
இவ்வுலகத்தை அழைப்பது
பிரபஞ்சம் இயக்கிவரும்
பிரம்மம்
பிரம்மத்தை அறிவதுதான்
நம்ஞானம்

உலகத்தில் பிறந்ததனால்
உலகத்திலே பாசம்
உலகபாசம் மறப்பது தான்
உண்மையிலே ஞானம்
உலகவாழ்வில் உள்ள யாவும்
இன்பதுன்பம்
இதையுணராத மனிதனுக்கு
வாழ்வே சலனம்

பாவம் செய்ய மனிதர்களைத்
தூண்டுவது ஆசை
அதைப்பக்குவமாய்ச் சொல்லியது
பகவத் கீதை
ஞானமற்றஉலகவாழ்வில்
நாளெல்லாம் பேராசை
அவர் ஞாபகத்தில் இருக்காது
இறைவனோடும் ஆசை

வாழ்ந்து கொண்டு சாவதே
லௌகிகம்
சாவதுபோல் வாழ்வதுதான்
தெய்வீகம்
தெய்வீக வாழ்வினிலே வரும்
நிர்விகல்பம்
இதைத் தேடடவே வர வேண்டும்
ஞானயோகம்.

இனிப்பை மட்டும் ருசி பார்த்தால்
ஒருகட்டம் கசப்பாகும்
கசப்பைத் தொடர்ந்துணர
ஒருகட்டம் வெறுப்பாகும்
வெறுப்பு வளரவளர இதயம்
நெருப்பாகும்
இந்தநெருப்புக்கெல்லாம்
ஆசையே காரணமாகும்.

**நீலையூர் சுதா**



காசா

## இஸ்ரேல் தாக்குதலில் 27 பேர் உயிரிழப்பு



ஐநா பாடசாலை மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் அங்கு தஞ்சமடைந்திருந்த 27 பேர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. மத்திய காசாவில் உள்ள ஐநாவின் பாடசாலை மீதே இஸ்ரேல் ஈவிரக்கமின்றி தாக்குதல் நடத்தியுள்ளது.

இந்நிலையில், ஹமாசின் முகாம் அமைந்திருந்த பகுதியையே தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

மேலும், நுசெய்ரட் அகதிமுகாமில் உள்ள பாடசாலையின் மேல்தளத்தில் காணப்பட்ட இரண்டு வகுப்பறைகள் மீது இஸ்ரேலிய விமானங்கள் ஏவுகணை தாக்குதலை மேற்கொண்டதாக கூறப்படுகின்ற நிலையில், அழிக்கப்பட்ட வகுப்பறைகளையும் பிரதே அறையில் உள்ள பிரேதங்களையும் காண்பிக்கும் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் வெளியாகி காண்போர் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றது.

அதேசமயம், அந்த காணொளியில் பெண்ணொருவர், "போதும் நாங்கள் பல தடவை இடம்பெயர்ந்துள்ளோம். உறக்கத்திலிருந்த எனது நான்கு பிள்ளைகளை அவர்கள் கொன்றுவிட்டனர்" என்று அவர் கதறுகின்றார். இது கல்லையும் கரைக்கும் வண்ணமுள்ளது.

இந்நிலையில், அந்த பகுதியில் ஹமாசின் முகாம் அமைந்திருந்ததாக தெரிவிக்கப்படுவதை ஹமாஸ் மறுத்துள்ளதோடு, இஸ்ரேல் ஆக்கிரமிப்பு படையினர் இடம்பெயர்ந்த மக்களிற்கு எதிராக தாங்கள் மேற்கொள்ளும் ஈவிரக்கமற்ற போரை நியாயப்படுத்த கட்டுக்கதைகளை வெளியிடுகின்றனர் என தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இருபதுக்கு –20 உலகக் கிண்ணம்: அயர்லாந்தை வீழ்த்திய இந்தியா



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 உலகக் கிண்ணத் தொடரில், ஐக்கிய அமெரிக்காவின் நியூ யோர்க்கில் புதன்கிழமை (05) நடைபெற்ற அயர்லாந்துடனான குழு ஏ போட்டியில் இந்தியா வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அயர்லாந்து, அர்ஷ்டீப் சிங் (2), ஹர்திக் பாண்டியா (3), ஜஸ்பிரிட் பும்ரா (2), மொஹமட் சிராஜ், அக்ஸர் பட்டேலிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 16 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 96 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில் கரெத் டெலனி 26 (14) ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு 97 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா, றோஹித் ஷர்மாவின் 52 (37), றிஷப் பண்டின் ஆட்டமிழக்காத 36 (26) ஓட்டங்களுடன் 12.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில், பென் வைட் 1-0-6-1, மார்க் அடைர் 4-0-27-1, கேர்ட்டிஸ் கம்பர் 1-0-4-0, பரி மக்கார்தி 2.2-0-18-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக பும்ரா தெரிவானார்.

இந்நிலையில் பார்படோஸில் வியாழக்கிழமை (06) நடைபெற்ற ஓமானுடனான குழு பி போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: ஓமான்

அவுஸ்திரேலியா: 164/5 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் ஆ.இ 67 (36), டேவிட் வோர்னர் 56 (51) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஆஃகிப் இல்யாஸ் 0/18 [4], ஷகீல் அஹ்மட் 0/28 [4])

ஓமான்: 125/9 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: அயான் கான் 36 (30), மெஹ்ரான் கான் 27 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 3/19 [3], மிற்செல் ஸ்டார்க் 2/20 [3], அடம் ஸாம்பா 2/24 [4], நாதன் எலிஸ் 2/28 [2], ஜொஷ் ஹேசில்வூட் 0/21 [4], கிளென் மக்ஸ்வெல் 0/11 [2])

போட்டியின் நாயகன்: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்

இந்நிலையில் கயானாவில் நடைபெற்ற பப்புவா நியூ கினியுடனான குழு சி போட்டியில் உகண்டா வென்றது.

இதேவேளை நியூ யோர்க்கில் இன்றிரவு 8 மணிக்கு நடைபெறவுள்ள குழு ஏ போட்டியில் கனடாவை அயர்லாந்து எதிர்கொள்ளவுள்ளதுடன், கயானாவில் நாளை அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ள குழு சி போட்டியில் ஆப்கானிஸ்தானும், நியூசிலாந்தும் மோதவுள்ளதுடன், டலாஸில் நாளை காலை 6 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் பங்களாதேஷும், இலங்கையும் மோதவுள்ளன.

ஒட்டாவா

## இந்தியாவுடன் இணைய பணியாற்ற தயாராகவுள்ள கனடா

பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசுடன் இணைந்து பணியாற்ற தனது அரசு தயாராக இருப்பதாக கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையே கசப்பான உறவு நீடித்து வரும் நிலையில் ட்ரூடோ இதனை தெரிவித்துள்ளார்.


கனடாவில் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்திய முகவர்களுக்குத் தொடர்பு இருப்பதாக கடந்த ஆண்டு ஜஸ்டின் ட்ரூடோ அந்த நாட்டின் பாராளுமன்றத்தில் பகிரங்கமாக தெரிவித்தார். அதையடுத்து கனடாவில் உள்ள இந்திய தூதரக அதிகாரியை வெளியேறுமாறு அந்த நாடு உத்தரவிட்டது.

மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்று தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளின் ஆட்சிக்கு அவர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



ரஸ்யா

## மேற்குலக நாடுகளை எச்சரிக்கும் புடின்



ரஸ்யாவை தாக்குவதற்கு மேற்குலகம் ஆயுதங்களை வழங்கினால் மேற்குலக நாடுகளை தாக்குவதற்கு நாங்கள் ஆயுதங்களை வழங்குவோம் என ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைனுக்கு ரஸ்யாவை தாக்கக்கூடிய நீண்ட தூர ஆயுதங்களை மேற்குலகம் வழங்கியுள்ளதை கண்டித்து கருத்து தெரிவிக்கும்போதே, புட்டின் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ரஸ்யாவிற்குள் உள்ள இலக்குகளை தாக்குவதற்கு அமெரிக்கா உட்பட பல நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களை வழங்கியுள்ளன. இதன் காரணமாக பாரதூரமான பிரச்சினைகள் உருவாகலாம் எனவும் புட்டின் வெளிநாட்டு செய்தியாளர்களுக்குத் தெரிவித்துள்ளார்.

## மட்ரிட்டிலிருந்து வெளியேறும் முடிவை மாற்றுமாறு நாச்சோவைக் கோரிய அன்சிலோட்டி



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் அணித்தலைவரான நாச்சோவின் கழகத்தை விட்டு வெளியேறும் முடிவை மாற்றுமாறு அக்கழகத்தின் முகாமையாளரான கார்லோ அன்சிலோட்டி கோரியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை கழகப் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ள டொனி க்றூஸையும், ஓய்வு முடிவை மாற்றுமாறு அன்சிலோட்டி கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

## உலகத் தலைவர்களின் வாழ்த்து மழையில் பிரதமர் மோடி



மக்களவை தேர்தலில் பாஜ கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து உலக நாடுகளின் தலைவர்கள் பிரதமர் மோடிக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

அந்தவகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தெரிவித்துள்ள வாழ்த்து செய்தியில், "வரலாற்று சிறப்புமிக்க தேர்தலில் வாக்களித்த 65 கோடி வாக்காளர்களுக்கும், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றிக்கு வாழ்த்துகள். வரம்பற்ற சாத்தியக் கூறுகளுடன் எதிர்காலத்திலும் நம் நாடுகளிடையேயான நட்பு வளர்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் பிரதமர் மோடிக்கு தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும், "இந்தியாவும், இங்கிலாந்தும் நெருக்கமான நட்பை பகிர்ந்து கொள்கின்றன. இந்த நட்பு தொடர்ந்து மேலும் செழித்து வளரும்" என்று செய்தி வெளியிட்டுள்ளார்.



ஜம்மு–காஷ்மீர்


## சிறைக்குள் இருந்தே தேர்தலில் சாதித்த சிறைக் கைதிகள்

பிரிவினைவாத இயக்க தலைவர்கள் இருவர் சிறையில் இருந்தபடியே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளனர்.

காஷ்மீர் பள்ளத்தாக்கின் முக்கியமான தொகுதிகளில் ஒன்றான பார்முல்லா இந்த மக்களவைத் தேர்தலில் பெரும் அரசியல் வீழ்ச்சியை கண்டுள்ள நிலையில், சுயேட்சை வேட்பாளரான பொறியாளர் ரஷீத் சிறையில் இருந்தபடியே வெற்றி பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது.

தன்னை எதிர்த்து போட்டியிட்ட காஷ்மீர் முன்னாள் முதலமைச்சர் ஓமர் அப்துல்லாவை ஒரு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் இவர் தோற்கடித்துள்ளார். இதன்மூலம் யார் இந்த பொறியாளர் ரஷீத் என்ற தேடல் அதிகரித்துள்ளது.

குக்வாரா மாவட்டத்தை சேர்ந்த பொறியாளர் ரஷீத் என்று பிரபலமாக அறியப்படும் ஷேக் அப்துல் ரஷீத், அரசின் கட்டுமான பொறியாளராக இருந்தவர். பின்னர் வேலை வேண்டாம் என உதறிவிட்டு அவாமி இத்தேஹாத் கட்சியை தொடங்கினார்.



## சுவீடனை வென்ற டென்மார்க்

தம் நாட்டில் புதன்கிழமை (05) நடைபெற்ற சுவீடனான சிநேகபூர்வ கால்பந்தாட்டப் போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் டென்மார்க் வென்றது.

டென்மார்க் சார்பாக பியர்-எமிலே-ஹொஜ்ப்ஜேர்க், கிறிஸ்டியன் எரிக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு, சுவீடன் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸான்டர் இஸாக் பெற்றிருந்தார்.

இதேவேளை ஐக்கிய்ட அமெரிக்காவின் டென்வரில் வியாழக்கிழமை (06) காலை நடைபெற்ற மெக்ஸிக்கோவுடனான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் உருகுவே வென்றது. உருகுவே சார்பாக, டர்வின் நுனேஸ் மூன்று கோல்களையும், பகுன்டோ பெல்லிஸ்ரி ஒரு கோலையும் பெற்றனர்.

## புதிய முகாமையாளராக கொன்டேயை நியமித்த நாப்போலி

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான நாப்போலியின் புதிய முகாமையாளராக இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான டொட்டென்ஹாம் ஹொட்ஸ்பரின் முன்னாள் முகாமையாளரான அந்தோனியோ கொன்டே, மூன்றாண்டு ஒப்பந்தமொன்றில் நியமிக்கப்பட்டுள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 07, ஜூன் 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.